[1970 மார்ச் 11

திரு. என். மருதாசலம் : பெண் ஆசிரியர்களுக்கு எந்த எந்த ஜில்லாக்களில் எவ்வளவு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மொத்தத்தில் 1,300 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த எந்த இடத்தில் எவ்வளவு என்கிற விவரம் இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : ஒரு பெண் ஆசிரியருக்கு ஒரு வீடு என்று கட்டிக்கொடுக்கப்படுவதினால் தனியாக அங்கே ஒரு பெண் ஆசிரியர் குடியேற பயப்படுகிறார். ஒரு வீடு இரண்டு பேர்களுக்கு என்கிற அடிப்படையில் ப்ளான் அமைத்துக் கட்டிக் கொடுக்க வகை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறபோது 1,300 வீடுகளே கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நிதி வசதி ஏற்படுகிறபோது நல்ல முறையில் இது கவனித்து செயல்படுத்தப்படும்.

மாவட்டங்களில் கண் மருத்துவ மனைகள்

* 313 வினா.—**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் தனியாக ஒரு கண் ஆஸ்பத்திரி ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) கண் டாக்டர்களின் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் 'Diploma in Ophthalmology' போன்ற பட்டப்படிப்பு வகுப்புகளை ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) சென்னை மருத்துவக் கல்லூரி, மதுரை மருத்துவக் கல்லூரி இவைகளில் 6 இடங்கள் வீதம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், அக்டோபர் மாதங்களில் ' Diplomo in Ophthalmology ' வகுப்புகள் நடத்தப் பட்டு வருகின்றன.

திரு. சி. கோவிந்தராஜன் : இந்தக் காலத்தில் கண் சம்பந்தப் பட்ட வியாதிகள் அதிகமாக இருக்கிற காரணத்தினால்—மாவட்ட தலைநகரில் உள்ள ஆஸ்பத்திரிகளிலாவது தனி டிபார்ட்மெண்டை ஏற்படுத்தி கண் வைத்தியர்களைப் போட ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஒவ்வொரு மாவட்டத்திலும் கண் மருத்துவ மனை இல்லை என்றுதான் சொன்னேன். ஆனால், தலைநகர ஆஸ்பத்திரி ஒவ்வொன்றிலும் இப்போதே தனி கண் வைத்தியப் பிரிவு இருக்கிறது, டாக்டர்கள் தனியாக இருக்கிறார்கள். சென்னையில் மட்டும் தான் தனியாகவே கண் மருத்துவ மனை இருக்கிறது.

1970 மார்ச் 11]

திரு. செஞ்சி வெ. முனுசாமி : முன்பு இருந்ததைவிட இப்போது—ஆடம்பரத்திற்காக அன்றி ஆவசியத்திற்காக வேண்டி—கண்ணுடி பலர் போடுகின்றனர். பிறக்கும்போதே கண்ணுடியோடு பிறந்தார்களோ என்று எண்ணும்படியாக—குழந்தைகள் முதற்கொண்டு கண்ணுடிப் போட்டுக் கொள்கிறுர்கள். ஆகவே, கண் நோய் ஏற்படுவதற்கு காரணம் என்ன என்பதை கண் மருத்துவ நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து பொதுமக்களுக்கு அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கண் நோய்க்கு ஆங்காங்கே நல்ல முறையில் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள கண் மருத்துவமனை ஆசியாவிலேயே மிகச் சிறந்த ஒன்ருக, சிறப்பான பணியாற்றிக்கொண்டு வருகிறது. தேவைகளை ஒட்டி, இவற்றை விரிவுபடுத்தவும் அரசு ஆவன செய்யும்.

திருமதி கே. பி. ஜானகி அம்மாள் : மதுரையில் எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் கண் டாக்டர் வெங்கடசாமி தலைமையில் கண் டாக்டர்கள் குழு நல்லமுறையில் கிராமங்களுக்கே சென்று ஏழைகளுக்கு சிகிச்சை அளித்து வருகிருர்கள். இது மக்களுக்கு உதவியாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா ? இதுபோல கோவை, திருச்சி, சென்னை போன்ற இடங்களிலும் செய்வதற்கு முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரையில் டாக்டர் வெங்கடசாமி தலைமையில் நல்லமுறையில் இயங்கி வருவது தெரியும். அவர் அரசாங்கத்திற்கு இதுபற்றி ஒரு திட்டத்தையே தந்திருக்கிருர்கள். மேலும் மாணவர்களுக்குக் கண் நோய் வருவதற்கான காரணம், அதைத் தடுத்துக் கொள்வதற்கான வழி இது பற்றி பயிற்சி அறிவு அளிக்கவும் இதில் திட்டமிருக்கிறது. அவருடைய திட்டம் அரசாங்கப் பரிசீலனையில் இருக்கிறது. மதுரையில் பரீட்சார்த்தமாக பைலட் யூனிட்டாக வைத்து இதன் செயல்முறைகளைத் தெரிந்துகொண்டு விரிவுபடுத்தலாம் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

பொறியியல் கல்லூரிகளில் முறைவகுப்பு ஏற்பாடு

* 314 வினு.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

என்ஜினிரிங் கல்லூரிகளில் இட நெருக்கடியைப் போக்கும் முறையில் ஷிப்ட் முறையைப் புகுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.